# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று தஞ்சையில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நான்காம் கட்டமாக தஞ்சாவூரில் பரப்புரையை தொடங்குகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **10.04.2026 (வெள்ளிக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | தஞ்சாவூர் (பொதுக்கூட்டம்) | திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை,பேராவூரணி, பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணம் |
| **11.04.2026 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | புதுக்கோட்டை (பொதுக்கூட்டம்) | கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி |
| மாலை 7 மணி | திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்) | காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை |
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# வீரத்தையும் வீராப்பையும் பா.ஜ.க.விடம் காட்டுங்கள்!

## எடப்பாடி பழனிசாமியைச் சாடிய – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

சென்னை, ஏப். 10 -

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



இன்றைய அரசியல் களம் அதன் நாகரிகத் தன்மையை இழந்து வருவதை மிகுந்த வருத்தத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தோல்வி பயம் வந்துவிட்டால் ஒரு மனிதர் எதை வேண்டுமானாலும் பேசலாமா?

கொரோனா காலத்தைப் பற்றிப் பேசும் எடப்பாடி பழனிசாமி, "நாங்கள் மட்டும் கொரோனாவை விரட்டியடிக்கவில்லை என்று, இன்றைய முதலமைச்சர் அவர்களை மிகவும் கீழ்த்தரமாகவும், மலிவான அரசியலோடும் பேசியுள்ளார். இத்தகைய பேச்சுக்களுக்குப் பின்னால் இருக்கும் பதவி வெறி கண்டிக்கத்தக்கது. மக்கள் எங்களை நம்பி வாக்களித்த காரணத்தால்தான், இன்று எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

நிர்வாக ரீதியாக நாங்கள் ஏதேனும் தவறு செய்திருந்தால், அதைச் சுட்டிக் காட்டுவதுதான் ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு அழகு. அதை விடுத்து, முதலமைச்சரையும், துணை முதலமைச்சரையும் தனிப்பட்ட முறையில் சாபமிடுவது எந்த விதத்தில் நியாயம்? இத்தகைய வன்ம மான பேச்சுகள் அவரின் அதிகார மோகத்தையே காட்டுகின்றன.

எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோதுதான் தூத்துக்குடி யில் 13 பேர் சுட்டுக்கொல்ல ப்பட்டனர். காவல் துறை தன் வசம் இருந்தும், "டிவியைப் பார்த்துதான் தெரிந்து கொண்டேன்" என்று பொறுப்பற்ற முறையில் பதிலளித்தவர் அவர். நீட் தேர்வால் அனிதா உள்ளிட்ட பல மாணவச் செல்வங்களை நாம் இழந்திருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் நீட் ரத்து செய்யப்படும் என்று ராகுல் காந்தி வாக்குறுதி அளித்தார். ஆனால், இன்று பாஜகவுடன் கூட்டணியில் இருக்கும் எடப்பாடி பழனிசாமி, ஒருமுறையாவது "தமிழகத்திற்கு நீட் வேண்டாம்" என்றோ, "மும்மொழிக் கொள்கையைத் திணிக்காதீர்கள்" என்றோ பிரதமரிடம் நேரில் வலியுறுத்தியது உண்டா? அண்ணா பெயரில் கட்சி வைத்துக்கொண்டு, அவர் காட்டிய இருமொழிக் கொள்கையைக் காக்க இவர்களால் முடிந்ததா?

மத்திய அரசிடம் காட்ட வேண்டிய வீரத்தை, இங்கே முதலமைச்சர் மீது மலிவான விமர்சனங்களா கக் கொட்டுகிறார். மக்கள் அனைத்தையும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். வரும் தேர்தலில் திருவெறும்பூர் தொகுதி மக்கள் உதயசூரியன் சின்ன த்திற்கு வாக்களித்து, இத்தகைய அவதூறு அரசியலுக்குத் தக்க பதிலடி கொடுப்பார்கள். அரசியல் ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் மோதத் தயார், ஆனால் கீழ்த்தரமான அரசியலைத் தவிர்க்க வேண்டும் என்பதே எங்களின் வேண்டுகோள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. உருளையான்பேட்டை இளங்கோ நகரில் உள்ள வாக்குச் சாவடி மையத்தில் வாக்களித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறித்து

# எடப்பாடி பழனிசாமி முற்றிலும் நிதானம் இழந்து பேசுகிறார்!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி கண்டனம்!

சென்னை, ஏப்.10

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்களின் அண்மைக்காலப் பேச்சுகள் அரசியல் நாகரிகத்திற்கேற்ப அமையவில்லை. தானும் ஒரு தேர்தல் போட்டியாளர் என்பதைக் கடந்து, தான் வகிக்கும் பொறுப்புகளை மறந்து, தன்னிலை இழந்து பேசிவருகிறார்.

தேர்தலில் வெற்றி - தோல்வி என்பதை விட, மக்கள் மனதில் நாம் என்னவாகப் பதிவாகியிருக்கிறோம் என்பதே முக்கியமாகும். அதில் எடப்பாடி பழனிசாமி, மிகப் பெரிய கீழிறக்கத்துக்குப் போய்விட்டார்.

'தோல்வி உறுதி' என்று தெளிவாகத் தெரிந்ததால், முற்றிலும் நிதானம் இழந்து, ஜன்னியில் பிதற்றுவதைப் போல அவரது பேச்சு அமைந்திருக்கிறது.

ஏற்கெனவே துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் குறித்துப் பேசியதும், தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் குறித்துப் பேசியிருப்பதும் பண்பற்ற பேச்சுகள்; அநாகரிகத்தின் உச்சம். இது கண்டனத்திற்குரியதாகும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (9–4–2026) காலை 7 மணிக்கு சின்னமலை எல்.டி.ஜி. சாலையில் தொடங்கி, தொடர்ந்து ஆரோக்கியமாதா நகரில் உள்ள 1 வது மற்றும் 2வது தெருக்கள், தாமஸ் நகர், பிஷப் காலனி, கக்கன்புரம், சிறீநகர் காலனி, ரெங்கராஜபுரத்தில் உள்ள 1 முதல் 5 தெருக்களிலும், பொன்னியம்மன் கோயில் தெரு, வெங்கடாபுரம், வெங்கடாபுரம் குடிசைப் பகுதி, விநாயகர்கோயில் தெரு, வேளச்சேரி சாலை, ஆஞ்சநேயர் கோயில் தெரு. செல்வரங்கராஜா தெரு, துளசிங்க தெரு, பாரதியார் தெரு, வட்ட கிளைக் கழக அலுவலகம் வரையிலும் வாக்குச் சேகரித்தார். இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், காங்கிரஸ் ஜோதி பொன்னம்பலம், முத்தமிழ், வி.சி.க. ம.ஜேக்கப், ம.நீ.ம.வெற்றிச்செல்வன் உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பங்கேற்றனர்.